பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 27 | செவ்வாய்க்கிழமை | 10.06.2025 | அதிர்வு 310

## கைது பயத்தில் கடவுளை நாடும் அரசியல்வாதிகள்

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டனர் எனக் கருதப்படும் சில அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் தற்போது வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனச் சிங்கள வார 04

# தையிட்டியில் போராட்டம் நடத்த வேண்டாம் என கஜேந்திரகுமார் எம்.பி. உட்பட 27 பேருக்குத் தடை

## மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட 27 பேருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் இன்றும் நாளையும் போராட்டம் செய்ய வேண்டாம் என்று அறிவித்தே இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தையிட்டி பகுதியில் உள்ள திஸ்ஸ விகாரையானது சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அப்பகுதியில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், பொசன் போயா தினமான இன்றும் நாளையும் குறித்த பகுதியில் போராட்டத்தில் ஈடுபட 06



# காணி வர்த்தமானி எப்போது இரத்தாகும்? லால் காந்தவுடன் பேசி அறிவிக்கின்றேன்

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கஜேந்திரகுமார் எம்.பியிடம் தெரிவிப்பு

**வடக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யப்படும் திகதி தொடர்பில் காணி அமைச்சர் லால் காந்தவுடன் கலந்துரையாடியதன் பின்னர் அறிவிப்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் தெரிவித்துள்ளார்.** 06



## அநுராதபுரம் சிறை கண்காணிப்பாளர் விளக்கமறியலில்




கைது செய்யப்பட்ட அநுராதபுரம் சிறைச்சாலைக் கண்காணிப்பாளரை எதிர்வரும் 11ஆம் திகதி 06

## பணி இடை நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் கைது

பணி இடை நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் அளிப்பதற்காக நேற்று மாலை அவர் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுத் 06






'சங்கு' – 'சைக்கிள்' கூட்டு, இன்று டக்ளஸுடன் பேச்சு, சபைகளில் ஆட்சி அமைக்க ஆதரவு கேட்டு' என்ற தலைப்பில் கடந்த 4 ஆம் திகதி காலை முரசு வெளியிட்ட செய்தி ஏற்படுத்திய பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. அந்தச் செய்தியால் காழ்ப்புணர்ச்சி கொண்ட 'சங்கு', 'சைக்கிள்' கூட்டு முரசு பத்திரிகையைக் கரித்துக் கொட்டி வருவது தெரிந்த விடயம்தான்.

முதலிலே அது, 'போலிச் செய்தி' என்றும், 'பொய்ச் செய்தி' என்றும் தமது முகப்புத்தகம் ஊடாக அறிவித்தார் சைக்கிளின் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ஆயினும் செய்தியின் உண்மைத் தன்மையை மக்கள் முழுமையாக உணர்ந்து கொண்டார்கள். போலி நாடகம் போடுபவர்கள் யார் என்பது மக்களுக்கு தெரிய வந்தது. அந்தச் செய்தி தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்துக் குறித்து பத்திரிகை ஆசிரியர் குறிப்பாக, தெளிவாக விளக்கம் தரப்பட்டு உண்மை அம்பலப்படுத்தப்பட்டு விட்டது. உண்மை மக்களுக்கு தெரியும். 06



# குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கம்மன்பில 3 மணிநேர வாக்குமூலம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று மூன்று மணிநேர வாக்குமூலம் வழங்கினார்.

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன் விடுவிப்பு சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார்.

இதன்போது ஊடகங்களுக்குப் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, மேற்படி 323 கொள்கலன்களின் பட்டியலைப் பகிரங்கப்படுத்த எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பான முடிவுகளை எடுத்த அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்பதாக தகவல்கள் இருப்பதாகவும், இது தொடர்பாக வெளிநாட்டு பயணத் தடையை விதிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தன்னிடம் உண்மையான சாட்சியங்கள் இருப்பதாகவும், ஆதாரங்கள் இல்லாமல் இதுபோன்ற குற்றச்சாட்டை ஒருபோதும் கூற மாட்டேன் என்றும் இந்த விடயத்தில் உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



# மஹிந்தானந்த உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல்

தமக்கு விதிக்கப்பட்ட 20 வருடக் கடூழிய சிறைத்தண்டனைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

அவர் சார்பில் அவரது சட்டத்தரணிகள் நேற்று இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் அரசுக்கு 53 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்திய குற்றத்துக்காக, முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு, கடந்த மே 29 ஆம் திகதி, கொழும்பு மேல் நீதிமன்றம் 20 வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.







# அட்டாளைச்சேனையில் வர்த்தக கண்காட்சி

(எம்.எவ்.நவாஸ்)

சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பது மற்றும் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச செயலக வர்த்தக கண்காட்சி -2025 நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலாளர் ஏ.சீ.அஹமட் அப்கர் தலைமையில் அட்டாளைச்சேனை கடற்கரை பூங்காவில் நடைபெற்றது.

கலை கலாச்சார நிகழ்வுகளோடு இடம்பெற்ற இந்த வர்த்தகக் கண்காட்சியில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேயவிக்கிர பங்குபற்றினார். சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எம்.ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர்

எம்.ஏ.சி.அகமட் நஸீல், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச்.ஏ.அனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ மஜீட், கிராம நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களும் பொதுமக்கள் உட்பட பலரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.





# இங்கிருந்து தமிழகத்துக்கு ஐவர் செல்ல அங்கிருந்து இருவர் படகில் திரும்பினர்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் தமிழகத்துக்கும், அங்கு இருந்து இருவர் இலங்கைக்கும் படகு வழியாகப் பயணித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக ஈழத்தமிழர்கள் வாழ வழியின்றி அவ்வப்போது தமிழகத்தில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை மன்னாரில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட ஐந்து பேர் தமிழகத்தின் தனுஷ்கோடி பகுதியில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களை கடலோர காவல் குழுமப் பொலிஸார் மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். பயணித்த ஐவரும் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகம் அகதி முகாமில் இருந்த திருகோணமலையைச் சேர்ந்த இருவர் படகு மூலம் நெடுந்தீவை அடைந்துள்ளனர். கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இருவரும் நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.






# சட்டவிரோத விகாரைகளுக்கு வரும் மக்களுக்கு நீதி,சமாதான ஆணைக்குழு பகிரங்க கோரிக்கை

மக்களின் உரித்துக் காணிகளை கையகப்படுத்தி, தனியார் காணிகளுக்குள் அத்துமீறி கட்டப்படுகின்ற விகாரைகளை நோக்கி பௌர்ணமி தினங்களிலும் விடுமுறை நாள்களிலும் வருகின்ற பௌத்த மதம் சார்ந்தவர்களுக்கு நீதி சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

"ஒரு பௌர்ணமி நாளில் ஒரு பகிரங்க வேண்டுகோள்" எனும் தலைப்பில் நீதி சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் இயக்குனர் அருட்பணி சூ.யே.ஜீவரட்ணம் அ.ம.தி. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டபட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

யுத்தத்தின் பிற்பாடு ஏறக்குறைய 16 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் தேசிய ஒருமைப்பாட்டையும் இன, மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய காலத்தில் இவற்றையெல்லாம் விடுத்து இன்னும் அடக்கு முறைகளும், உரிமை மறுப்புக்களும், தான்தோன்றித்தனமான பொறுப்பற்ற அரசியல் அதிகார வீச்சுக்களும் சிறுபான்மை இன மக்களை நோக்கி அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு கொண்டிருப்பது வேதனை அளிக்கின்றது.

கடந்த பங்குனி மாதம் 28 ஆம் திகதி காணி நிர்ணய உரிமைச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த அரசு வர்த்தமானியானது தமிழ் மக்களினுடைய காணிகளை அபகரிக்கின்ற நோக்கமாக கொண்டது என்று பல தரப்புக்களும் அச்சம் வெளியிட்டு கண்டனங்களை தெரிவித்தபோது இறுதியில் அதை இரத்துசெய்தமையை வரவேற்கின்ற அதேவேளை, இன்னும் இன மத சமூக நல்லிணக்கத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் செயற்பாடான தனியார் காணிகளுக்குள் அத்துமீறிய பௌத்த விகாரைகளின் கட்டுமானங்கள் மற்றும் புராதன தொல்பொருள் இடங்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் எந்த வித அகழ்வு மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள முடியாது என்று சொல்லப்படுகின்ற இடங்களில் பௌத்த விகாரைகளின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் வெளிப்படையாக மத வேறுபாட்டையும் பிரிவினை மனப்பான்மையையும் அதிகார வர்க்கம் வெளிப்படுத்துவதைக் காட்டுகின்றன.

இதை வடமாகாண நீதி, சமாதான நல்லிணக்கத்திற்கான பணியகம் வன்மையாகக் கண்டிக்கிற அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரித்துக் காணிகளை கையகப்படுத்தி, தனியார் காணிகளுக்குள் அத்துமீறி கட்டப்படுகின்ற விகாரைகளை நோக்கி பௌர்ணமி தினங்களிலும் விடுமுறை நாள்களிலும் வருகின்ற பௌத்த மத சகோதர சகோதரிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளையும் விடுக்கிறது.

அத்துமீறி அடுத்தவர் காணிகளுக்குள் கட்டப்படுகின்ற மத தலங்களில் ஆன்மீகத்தை தேடுவது அர்த்தமற்றதும், அநியாயமானதும் என்பதை புரிந்து கொண்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மத வழிபாட்டுத்தலங்களை நோக்கிய தங்களின் ஆன்மீக பயணங்கள் வேதனையளிக்கின்றன. நல்மனதோடு அவற்றை தவிர்த்து, தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களுக்குரிய காணிகளை மீள ஒப்படைக்க முயற்சிப்பதும் உங்களுடைய கடமை என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

அது மாத்திரம் இன்றி தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடிய வளமான நிலங்கள், காணிகள் எல்லாம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு கீழ் உள்ள நிலையில், அவற்றை எல்லாம் விடுவிக்க வேண்டிய தேவைப்பாடு உணரப்பட வேண்டிய சூழ்நிலையில், இப்படியான காணி அபகரிப்பு செயற்பாடுகள் தடை செய்யப்பட வேண்டும் என்பதையும் நீதி, சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகம் வலியுறுத்த விரும்புகிறது. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைது பயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு வரும் நிலையிலேயே இவர்கள் இவ்வாறு விகாரைகள் மற்றும் கோயில்களுக்குச் சென்று வழிபடுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

கதிர்காமத்தில் அண்மைய நாட்களில் 20 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் இதுவரை விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், சில அரச அதிகாரிகள் அநுராதபுரம், ஸ்ரீமகாபோதியில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவுக்குச் சென்றுள்ள சில அரசியல்வாதிகள் திருப்பதி உள்ளிட்ட தலங்களிலும் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.












# ஜிந்துப்பிட்டியில் வைகாசி விசாகத் தேர்

கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வைகாசி விசாகத் திருவிழாவின் 9ஆம் நாளான நேற்றுத் திங்கட்கிழமை தேர்த்திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. வசந்த மண்டபத்திக் ஆறு முகப் பெருமானுக்கு அலங்கார பூஜையை அடுத்து வீதி வலம் வருவதையும், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீஆறுமுகப் பெருமான் தேரில் புறப்பட்டுச் செல்வதையும், ஆலயம் வந்தடைந்ததும் பெருமானுக்கு பச்சை சாத்தி வீதி வலம் வருவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் காணலாம்.








# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் குறிப்பிட்ட சில விடயங்களை ஒட்டி, ஆசிரியர் குறிப்பில் அவருக்கு சவாலும் விடுக்கப்பட்டது. ஆனால் சவாலுக்கு வராமல் அவர் நாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார். இனி அவரைத் தொந்தரவு செய்வது தவறு. அத்துடன் அவருடனான சர்ச்சையை நிறுத்திக் கொள்வதுதான் அழகு.

இப்போது சங்கு கூட்டணியில் இருந்து சம்பந்தப்பட்ட சந்திப்புக்கு டக்ளஸ் தேவானந்தாவோடு தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்த புளொட் தலைவர் சித்தார்த்தன் தொலைக்காட்சி ஒன்றுக்கு இதே விடயத்தை ஒட்டியும் செவ்வியளித்து இருக்கிறார். அதில் முரசைப் பெயர் குறிப்பிடாமல் அவர் சாடி இருக்கிறார். கருத்து வெளியிடுவதும், விமர்சனம் செய்வதும் அவர் சுதந்திரம். ஆயினும் சில விடயங்களை அவர் புரட்டிப் பேசுகின்றார் என்பதை சுட்டிக்காட்ட வேண்டியது நமது கடமையாகின்றது. அவரது அந்தப் போட்டியில் முரசு தொடர்பில் அவர் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

1."டக்ளஸ் இந்தச் சந்திப்பு நடக்கவிருப்பது குறித்து அந்த ஊடகவியலாளருக்கு சொல்லி இருக்கலாம். அவர் எழுதமாட்டார் என்று நம்பி டக்ளஸ் அப்படிக் கூறியிருக்கலாம்."

2."அது நிச்சயமாக அந்த ஊடகம் ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும் என்பதற்காக செய்தியாக்கிய விடயம். இன்று தமிழரசுக் கட்சி போய் டக்ளஸின் அலுவலகத்துக்கு முன்னால் நின்று படம் எல்லாம் எடுத்து பெரிய விடயங்கள் நடந்திருக்கின்றன. அதனை அந்த ஊடகம் ஒரு பெரிய விடயமாகவே போடவில்லை. அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்தானே ...!"

3."அந்த ஊடகம் முதலில் அந்த செய்தியை போட்டது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவே. இப்போது தமிழரசு கட்சி போய் டக்ளஸைச் சந்தித்ததும் அந்த ஊடகம் என்னவென்று புரியாமல் பெரும் குழப்பத்தில் திகைத்துப் போய் நிற்கிறது. அவர்களுக்கு அது விளங்கவில்லை."

4."தமிழரசு டக்ளஸைச் சந்தித்து அவர்களது ஆதரவை கேட்க இருப்பதாக நான் அறிந்திருந்தேன். அதை அறிவதற்காகவே டக்ளஸிடம் பேசினேன். அவர் நேரில் பேசுவோம் என்பதால் அங்கு சென்று சந்திக்க இணங்கி இருந்தேன்."

– இவைதான் முரசு குறித்து பெயர் குறிப்பிடாமல் சித்தார்த்தன் குறிப்பிட்ட விடயங்களின் சாரம்.

இனி என் விளக்கத்தை அவருக்கும் சேர்த்து தருவது பொருத்தமாக இருக்கும்.

1. ஓர் ஊடகவியலாளனாக எனக்கு கிடைக்கின்ற தகவல்களில், செய்திகளில் எதை பயன்படுத்த வேண்டும் என்பது எனக்கு நன்கு தெரியும். சுமார் 46 வருட அனுபவம் எனக்கு உண்டு. டக்ளஸ் தேவானந்தா நான் எழுத மாட்டேன் என்று என்று நம்பி என்னிடம் கூறிய விடயத்தை நான் செய்தியாக்கிவிட்டேன் என்ற சாரப்பட சித்தார்த்தன் கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை. அந்தச் செய்தி வெளியான பின்னர் பல தடவைகள் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் பேசி விட்டேன். நேற்று மாலை கூடப் பேசினேன். இப்படி நீங்கள் சொல்ல வேண்டாம் என்று கூறிய விடயத்தை நான் எழுதி விட்டேன் என சித்தார்த்தன் அங்கலாய்க்கிறாரே என்று கேட்டேன். அவர் 'ஹா... ஹா..!' என்று தனக்கேயுரிய பாணியில் சிரித்தார். எனக்கு அந்தத் தகவலை அவர் பரிமாறிய போது அதை நான் உரிய சமயத்தில் பயன்படுத்துவேன் என்பது அவருக்கு தெரிந்திருக்கும். ஏனெனில் ஓர் ஊடகவியலாளனாக அவருக்கும் என்னை நன்கு தெரியும். நீண்ட காலமாக – அவர் விடுதலைப் போராட்ட தளபதியாக இருந்த காலம் முதலேயே – அவருடன் பரிச்சயம் உண்டு.

2. அடுத்தது, மூன்றாம் திகதி இரவு டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது நான் கேட்ட முதல் கேள்வியே உங்களோடு தமிழரசுக் கட்சியினர் சந்திப்புக்காகத் தொடர்பு கொண்டனரா என்பதுதான். அதை அறிவதற்காகத்தான் – அறிந்து முந்திக் கொண்டு செய்தியாக்குவதற்காகத்தான் – அவரோடு தொடர்பு கொண்டேன். அதை ஏற்கனவே சுட்டிக் காட்டி இருந்தேன். வாசகர்களுக்கு அது நினைவிருக்கும். தமிழரசுக் கட்சி டக்ளஸோடு பேச்சு நடத்த விருப்பதை முந்திக் கொண்டு செய்தியாக வெளியிடுவதற்காகவே அவரோடு நான் தொடர்பு கொண்டேன். ஆனால் தமிழரசுக் கட்சி தம்மோடு தொடர்பு கொள்ளவில்லை, சங்கு கூட்டணி தான் தொடர்பு கொண்டுள்ளது என்று டக்ளஸ் தேவானந்தா சொன்ன பின்னரே அதனை நாங்கள் செய்தியாக்கினோம் – குழப்பம் ஏற்படுத்தும் எண்ணத்தில் அல்ல – உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்தும் நமது பிரதான இலக்கின் காரணமாக.

2.பரபரப்பாக இந்த செய்திகள் வெளியான சமயத்தில் முரசு பத்திரிகையை சித்தார்த்தனோ அவரது கட்சியினரோ அலசிப் பார்க்காதிருக்க மாட்டார்கள் என்று கூறுவது நம்ப முடியாத விடயம். மேற்படி டக்ளஸ் தேவானந்தாவுடன் அவர்கள் பேச இருப்பது பற்றிய செய்தி கடந்த நான்காம் திகதி வெளியானது.

அன்று முன்னிரவில் டக்ளஸ் தேவானந்தா தொடர்புகொண்டு தமிழரசு கட்சியும் சந்திப்புக்கு நேரம் கேட்டிருப்பது பற்றிய தகவலை தெரிவித்தார். உடனடியாகவே 5 ஆம் திகதி காலை முரசில் அதனை முக்கிய செய்தியாக்கி இருந்தோம். அதன் இரண்டாம் பக்கத்தை வாசகர்களின் நினைவூட்டலுக்காக இங்கு இணைத்துள்ளேன்.

4. அடுத்த நாள் மாலையில் 5 மணிக்குப் பின்னரே தமிழரசுக் கட்சி தலைவர் சி.வி.கே.சிவஞானம் டக்ளஸ் தேவானந்தாவுடன் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு வெளியே வந்து பத்திரிகையாளரைச் சந்தித்தார். அச்சமயத்தில் மாலை முரசு பிரசுரத்துக்குத் தயாராக இருந்தது. அப்படி இருந்தும் அதனை நிறுத்தி,

07



















## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பகக்கத் தொடர்ச்சி...)

அந்தச் சந்திப்பு பற்றிய செய்திகளை படத்தோடு ஒரு தனிப் பக்கமாக்கி, முன்னுரிமை கொடுத்து பிரசுரித்தோம். ஐந்தாம் திகதி மாலை முரசு மூன்றாம், நான்காம் பக்கங்களை வாசகர்களுக்கு நினைவூட்டுவதற்காக இத்தோடு இணைத்துள்ளேன்.

ஆகவே தமிழரசு கட்சி டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தமையால் எமது ஊடகம் திகைத்து, மலைத்து என்ன செய்வது என்று தடுமாறி இருக்கவும் இல்லை, அது பற்றிய செய்தியை படம் எல்லாம் எடுத்து, பெரிய விடயமாகவே விரைந்து – முந்திக் கொண்டு – பிரசித்தேயிருக்கின்றது, அப்படிப் பிரசுரிக்காமல், போடாமல் முரசு ஒழித்து விட்டது என்பது போல சித்தார்த்தன் குறிப்பிட்ட கருத்து முற்றிலும் தவறானது, பொய்யானது என்பதை அவருக்கும் சேர்த்துச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

5.அது மாத்திரமல்ல 'முரசு' செய்தியை முரசு என்று பெயர் குறிப்பிடாமல் ஓர் ஊடகம் முன் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து செய்தி பிரசுரித்தது என்ற பிரலாபத்துடன் சித்தார்த்தனிடம் கேள்வி கேட்கத் தொடங்கிய இரண்டு தொலைக்காட்சி ஊடகவியலாளர்களுக்கும் கூட, தமிழரசு – டக்ளஸ் சந்திப்பு தொடர்பாக மற்றைய பத்திரிகைகளுக்கு முன்னர் முந்திக்கொண்டு, விரைந்து, விவரமாக செய்தியை வாசகர்களுக்கு கொடுத்த பத்திரிகை முரசுதான் என்பது தெரியாமல் போனது துரதிர்ஷ்டம்தான். "இன்று தமிழரசு கட்சி போய் டக்ளஸின் அலுவலகத்துக்கு முன்னால் நின்று படம் எல்லாம் எடுத்து பெரிய விடயங்கள் நடந்திருக்கின்றன. அதனை அந்த ஊடகம் ஒரு பெரிய விடயமாகவே – செய்தியாகவே – போடவில்லை. அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்தானே ...!" என்று சித்தார்த்தன் கூறிய போது அந்த இரு தொலைக்காட்சி ஊடகவியலாளர்களும் 'உம்' கொட்டிக் கொண்டிருந்தமை என்னவோ சக ஊடகவியலாளனாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. விடயத்தைக் குறிப்பிட்டு, "இல்லையே, உங்களுடைய முதல் செய்தியை பிரசுரித்த அதே அளவு முக்கியத்துவதோடு தமிழரசு கட்சியும் டக்ளஸைச் சந்திக்க இருந்த செய்தியையும் அது பற்றிய தகவல் வெளியான கையோடு முரசு பிரசுரித்து இருந்தது. சந்திப்பு முடிந்ததும் ஒரு மணித்தியாலத்துக்குள்ளேயே அது பற்றிய செய்தியை படங்களோடு மாலை முரசு விரிவாக வெளியிட்டு இருந்தது." என்பதை அவர்கள் குறுக்கிட்டுக் கூற மறந்து போனமை, அதுவும் வடக்கின் அனுபவம் மிக்க ஊடகவியலாளர்கள் வரிசையில் இருக்கின்ற இருவர் மறந்து போனமை அல்லது அதனை சித்தார்த்தனிடம் சுட்டிக் காட்டி கேட்காமல் தவிர்த்தமை அவரின் புரட்டலுக்கு இவர்கள் துணை போன மாதிரிஒரு நெருடலை எனக்குத் தந்தது.

ஊடகச் செய்திகளை இத்தகைய பேட்டிகளுக்கு ஆதாரமாக முன்நிறுத்தி கேள்வி எழுப்பும்போது, அவை தொடர்பான சகல விடயங்களையும் மனதில் உள்வாங்கிக் கொண்டு அவர்கள் களத்தில் இறங்க வேண்டும் என்பதை ஓர் ஆலோசனையாக சொல்லி வைக்க விரும்புகிறேன். அந்த உரிமை எனக்கு இருக்கின்றது என்ற எண்ணத்தில் இதைக் குறிப்பிடுகிறேன்.

இங்கு அதனை பதியாமல், அந்த இருவருக்கும் தொலைபேசி அழைப்பு எடுத்து தனிப்பட்ட முறையில் நான் இதனைச் சுட்டிக்காட்டி இருக்க முடியும். ஆயினும் இங்கு அதனை பதிகிறேன். அதற்கு காரணம், அந்த ஊடகவியலாளர்கள் அந்த பேட்டியிலேயே சித்தார்த்தனை இடைமறித்து இந்த விடயத்தை சுட்டிக்காட்டி இருந்தால் சித்தார்த்தனின் நிலைமை என்னவாக இருக்கும் என்பதை அவருக்கு தெளிவுபடுத்தவே இங்கு சுட்டினேன்.

"தமிழரசு டக்ளஸைச் சந்தித்து அவர்களது ஆதரவை கேட்க இருப்பதாக நான் அறிந்திருந்தேன். அதை அறிவதற்காகவே டக்ளஸிடம் பேசினேன். அவர் நேரில் பேசுவோம் என்றமையால் அங்கு சென்று சந்திக்க இணங்கி இருந்தேன்." என்று சித்தார்த்தன் இப்போது கூறுவதும் முழுத் தவறு. உண்மைக்கு மாறானது. சபைகளில் ஆட்சி அமைக்க ஆதரவு கேட்டு பேசுவதற்கே சித்தார்த்தன் தன்னுடன் தொடர்பு கொண்டார் என்று டக்ளஸ் மட்டும் என்னிடம் கூறவில்லை. இந்த ஆதரவு கோரும் விடயத்தையும் அதற்காக டக்ளஸைச் சந்திக்க வேண்டி இருக்கின்றமையையும் அதற்கு முற்கூட்டியே டக்ளஸின் ஆலோசகரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான சி.தவராஜாவுடனும் சித்தார்த்தன் உரையாடி இருந்தார். இப்போது குறிப்பிடுவது போல தமிழரசுக்கு ஈ.பி.டி.பி. ஆதரவு தர இருக்கின்றதா என்பதை அறிவதற்கு அல்ல, தமிழரசை முந்திக் கொண்டு ஈ.பி.டி.பியின் ஆதரவைத் தாங்கள் பெறுவதற்காகவே அந்தச் சந்திப்புக்கு சித்தார்த்தன் முயன்றார். இப்போது செய்தி முற்கூட்டியே அம்பலமாகி, தமது 'கொள்கை கூட்டுக்குள்'(?) குழப்பம் வந்து விட்டதால் ஊடகத்தின் மீது அபவாத குற்றத்தைச் சுமத்தி, தான் ஆதரவு கேட்டு டக்ளஸைச் சந்திக்க முயலவில்லை என்று கதை விடுகிறார் சித்தார்த்தன். அதுதான் உண்மை.

## காணி வர்த்தமானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகள் 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராது விடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அந்த வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரி வலுப் பெற்ற எதிர்ப்பை அடுத்து, அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதனை இரத்துச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வரை வெளியிடப்படவில்லை.

அதேபோன்று பிரதமருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால் காந்தவால் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது இந்த விவகாரம் பற்றி எந்தவொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த வர்த்தமானி அறிவித்தல் எப்போது இரத்துச் செய்யப்படும் எனக் குறித்த திகதியொன்றை அறிவிக்குமாறு குறுந்தகவல் ஊடாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் தான் கோரியிருப்பதாகவும், இது பற்றி நேற்று திங்கட்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் பேசவிருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை இது பற்றி கஜேந்திரகுமார் எம்.பியிடம் வினவியபோது, இந்த விடயம் தொடர்பில் காணி அமைச்சர் லால் காந்தவுடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தனது குறுந்தகவலுக்குப் பதில் அனுப்பியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த விடயம் தொடர்பில் பிரதமரின் செயலாளருக்கும் தெரியப்படுத்தியிருப்பதாகவும்,அவரும்இதுகுறித்துஉடனடியாக ஆராய்வதாக உறுதியளித்திருப்பதாகவும் கஜேந்திரகுமார் எம்.பி. கூறினார்.

## அநுராதபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் அனுராதபுரம் சிறைச்சாலையின் கைதி ஒருவரைச் சட்டவிரோதமாக விடுவித்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர் நேற்றுமுந்தினம் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பணி இடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவைப் பணி இடை நீக்கம் செய்வதற்கு நேற்று திங்கட்கிழமை காலை கூடிய அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதி பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## தையிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டாம் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட 27 பேருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

# பரிசோதனையின்றி கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை; உண்மைகளை வெளிப்படுத்த வலியுறுத்துகின்றார் சஜித்

கடந்த ஜனவரி மாதம் சுங்கத்தின் எந்தவித பரிசோதனைகளும் இல்லாமல் சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக கடுமையான சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டை அரசியல்வாதிகளை விடுத்து முதலில் சுங்கத் தொழிற்சங்க ஒன்றியமே முன்வைத்தது. சுங்கப் பணியாளர்கள் சங்கம் மற்றும் சிரேஷ்ட சுங்க அதிகாரிகள் உட்பட சுங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான தரப்பினர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். முறையான பரிசோதனை நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாது அதிக ஆபத்துள்ள கொள்கலன்கள் சில நாள்களுக்குள் அவசரமாக விடுவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கலன்களை விடுவிப்பதால் நாட்டிற்குக் சேர வேண்டிய வருவாய் இழப்பு, தடைசெய்யப்பட்ட பொருள்களை விடுவித்தமை என பிரச்சினையொன்று தானாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முன்னர் தடை விதிக்கப்பட்ட தரப்பினரின் கொள்கலன்களும் இதில் அடங்கியுள்ளன. இது குறித்து அரசாங்கத்திடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் எதுவும் நடக்கவில்லை. இந்த விசாரணையின் வெளிப்படைத்தன்மையில் சிக்கல்கள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். ஜனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்பற்றவர்களாக நடந்து கொள்ள முடியாது. ஜனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்பற்றவர்களாகவும் பொறுப்புக்கூறல் இல்லாதவர்களாகவும் செயற்பட முடியாது. சுமார் 60 வீதமான கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கொள்கலன்களைப் பரிசோதனையின்றி விடுவித்தமை பல கடுமையான பிரச்சினைகளை கிளப்பிவிட்டுள்ளன. இது திருட்டை உருவாக்குகின்றது. ஊழல் செய்பவர்களுக்கு வழி சமைக்கப்பட்டுள்ளது. ஊழலை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கே இங்கும் வழி திறந்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

கொள்கலனை பரிசோதனை செய்யும் உபகரணங்களுக்காக பில்லியன்




கணக்கில் செலவிடப்படுகின்றன. ஆனால் இன்று 60 வீதல் கொள்கலன்கள் எந்தவித பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை. இந்தக் கொள்கலன்களை பரிசோதனைக்கு உட்படுத்தாமல் ஆபத்தான பொருள்கள் இல்லை என்று எவ்வாறு கூற முடியும்? இது பெரும் பேசுபொருளுக்குவழிவகுத்துள்ளது. இவற்றில் ஆயுதங்கள் இருந்தன எனவும் பேசப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில், இதனால் தேசிய பாதுகாப்புக்கு பெரும் ஆபத்து காணப்படுவது தெளிவாகத் தெரிகிறது. எனவே, இது குறித்து வெளிப்படையான, மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# அரச கால்நடை வைத்தியர்கள் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பால் பொதுமக்கள் பாதிப்பு









(கி.வசந்தன்)

வவுனியாவில் அரச கால்நடை வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்புக் காரணமாக பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர்.

அரச கால்நடை வைத்தியர்களுக்காக தனியான பணி யாப்பு உருவாக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ள அரச கால்நடை வைத்தியர்கள் சங்கத்தினர் அந்த யாப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக வவுனியா அரச கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடை வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக பொதுமக்கள் தங்கள் கால்நடைகளிற்கான மருத்துவ தேவைக்காக வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## டெங்குப் பரவல்

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 25ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மழையுடனான வானிலை மீண்டும் அதிகரிக்கக் கூடும் என அறிவுக்கப்பட்டுள்ள நிலையில் டெங்கு நோய் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சல் காரணமாக 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனால் இந்த டெங்கு நோயாளர் எண்ணிக்க. உயர்வு அச்சத்திற்குரிய ஒன்றல்ல என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் டாக்டர் பிரெசிலா சமரவீர தெரிவித்திருக்கின்றார்.

கடந்த மாதம் வெசாக் காலத்தில் மட்டும், புதிதாக 19 ஆயிரம் புதிய டெங்குத் தொற்றுப் பதிவுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த அதிகரிப்பு ஆபத்தான சமிக்ஞையா எனக் கேட்டபோது “இல்லை. இது ஒரு சிறிய அதிகரிப்பு மட்டுமே . இது சமீபத்திய குறைந்த அழுத்த நிலைமையால் ஏற்பட்ட மழையினால் நேர்ந்தது” என்று அவர் பதிலளித்திருக்கின்றார்.

“இல்லை, இது ஆபத்தான எண்ணிக்கை இல்லை. இருப்பினும், கடந்த மே மாதத்துடன் ஒப்பிடும்போது டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, அத்தகைய அதிகரிப்பு இல்லை” - என்று அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

கடந்த ஆண்டு, மொத்தமாக, 49 ஆயிரம் தொற்றுகள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு வெசாக் காலத்தில் மட்டும் 19 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஆண்டின் இரண்டாம் பாதி இன்னும் இருந்தாலும், இந்த ஆண்டு தொற்றுகள் கடந்த ஆண்டை விட அதிகமாக இருக்க வாய்ப்பில்லை என்று டாக்டர் சமரவீர கூறினார்.

எதிர்பார்த்தபடி மேற்கு மாகாணம் முன்னிலை வகித்த நிலையில், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் சபரகமுவ மற்றும் கிழக்கு மாகாணம் உள்ளன.

2017 ஆம் ஆண்டில் மட்டும் ஒரு லட்சத்து 86 ஆயிரம் தொற்றுகள் பதிவு செய்யப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க உதாரணத்தை மேற்கோள் காட்டி அவர் தனது கருத்தை மீண்டும் வலியுறுத்தினார். இந்த ஆண்டு அத்தகைய எண்ணிக்கை சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

டெங்குத் தொற்று இம்முறை மோசமான பாதிப்பை ஏற்படுத்தாது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் டாக்டர் உறுதியளித்தாலும் டெங்கு பரவாமல் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மக்கள் அசமந்தமாக இருந்து விட முடியாது.

அதிகளவில் நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும், தங்களை, பாதுகாத்துக் கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் சுகாதார அதிகாரிகள் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் தேங்கி நிற்கும் நீரே டெங்கு பெருகுவதற்கு முதன்மை காரணியாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுவதால் அது குறித்து மக்கள் சிரத்தையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் உள்ளவர்கள், உடல் வலி, மூட்டு வலி, கடுமையான தலைவலி, மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

டெங்குவுடன் கூட்டுச் சேர்ந்து சிக்கன் குனியாவும் மக்களை வாட்டுகின்றமையால் மக்கள் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் சிரத்தையாக இருப்பது அவசியமாகும்.



# நாட்டின் மிகப்பெரிய மருந்து உற்பத்தி ஆலையின் கட்டுமான பணிகளை பார்த்தார் சுகாதார அமைச்சர்

நாட்டிலேயே மேற்கத்திய மருந்துகளுக்கான மிகப்பெரிய உள்ளூர் உற்பத்தி ஆலையின் கட்டுமானம் சுகாதார அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது.

இந்த மருந்து உற்பத்தி ஆலையில் உற்பத்தி நடவடிக்கைகள் தொடங்குவதன் மூலம், நாட்டின் மருந்து உற்பத்தித் துறையில் ஒரு பெரிய புரட்சி தொடங்கும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பிங்கிரியா ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு அடிப்படை ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும், நாட்டின் மிகப்பெரிய மேற்கத்திய மருந்து உற்பத்தியாளரான சினெர்ஜி பார்மாசூட்டிகல்ஸ் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சமீபத்தில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் ஆய்வு செய்யப்பட்டது.

பிங்கிரியா ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் 15 ஏக்கர் பரப்பளவில் 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி முதலீட்டில் சர்வதேச தரத் தரங்களின்படி கட்டப்பட்டு வரும் இந்த மருந்து தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை, சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப நிறுவப்பட்ட அதிநவீன மருந்து உற்பத்தி இயந்திர அமைப்பு மற்றும் இங்குள்ள அடிப்படை மருந்து உற்பத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றை சுகாதார அமைச்சர் ஆய்வு செய்துள்ளார்.






# பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் ஆறு உத்தியோத்தர்களுக்கு சிக்குன்குனியா

**(பொகவந்தலாவ நிருபர் எஷ்.சதீஷ்)**

பொகவந்தலாவ பிரதேசவைத்தியசாலையில் சேவையாற்றி வந்த ஆறு உத்தியோகத்தர்கள் சிக்குன்குனியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவ பொது சுகாதார காரியாலயம் தெரிவித்துள்ளது.

ஒரு வாரத்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் இவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமையை அடுத்து பொகவந்தலாவ பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் நுளம்புகளை ஒழிக்கும் நோக்குடன் புகை விசுறல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நோயினால் பாதிக்கப்பட்ட ஆறு நோயாளர்களும் பொகவந்தலாவ கெம்பியின் மற்றும் கெர்க்கஷ்வோல்ட் ஆகிய தோட்டப்பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொது சுகாதார பரீசோதகர்களின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட சுகாதார அதிகாரிக்குத் தகவல் வழங்கப்பட்டமையை அடுத்து அந்த அலுவலக அதிகாரிகளால் அந்தப் பகுதி முழுவதும் புகை விசிறல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் நிலை சீராக உள்ளதாகவும் வைத்தியசாலையின் வட்டாரங்கள் தெரிவித்தன.












# கொழும்பிலிருந்து சிங்கப்பூர் கொடியுடன் மும்பை நோக்கி சென்ற கப்பலில் தீ பரவல்

கொழும்பு துறைமுகத்திலிருந்து மும்பை நோக்கிச் சென்ற கொள்கலன் கப்பலில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

சிங்கப்பூர் கொடியுடன் 'எம்.வி. வான் ஹை 503' என்ற கொள்கலன் கப்பல், கொழும்பிலிருந்து மும்பையின் நவா ஷேவாவுக்கு செல்லும் வழியில், கேரளாவின் பேப்பூர் கடற்கரை அருகே அரபிக் கடலில் வைத்து நேற்று திங்கள் கிழமை தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

கப்பலில் ஏற்பட்ட பல வெடிப்புகளைத் தொடர்ந்து தீப்பற்றியதால், 20 கொள்கலன்கள் கடலில் விழுந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கொள்கலன் கப்பலில் ஆபத்தான 4 பொருட்கள் உட்பட வேறு பொருட்கள் இருந்துள்ளதாக துறைமுக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கப்பலில் பணியாற்றிய 22 பணியாளர்களில் 18 பேர் கடலில் குதித்த நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்டவர்களில் 5 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் 4 பேரை காணவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படை இணைந்து மீட்பு மற்றும் தேடுதல் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளன.



# 25,055 பேருக்கு டெங்கு பாதிப்பு

இந்த வருடத்தில் இதுவரை 25,055 டெங்கு நோயாளர்கள், அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், டெங்கு நோயினால் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலவிய மழையுடனான காலநிலையை அடுத்து நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் டெங்கு நோயினால் 25 சதவீதமான, மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தநிலையில், காய்ச்சல், வாந்திபேதி ஏற்படுமிடத்து வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில், டெங்கு பெருக்கம் உள்ள இடங்களைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு, உரியப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம்



தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவில் இருந்து அதன் விசாரணைப் பிரிவு பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். மொஹான் லால் நியமிக்கப் பட்டுள்ளார்.

பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே. பண்டார, அம்பாறை பிராந்தியத்தில் இருந்து குற்றப்புலனாய்வுத் திணைக் களத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள் யூ.டி. அனுரங்க கல்கிசை பிராந்தி யத்தில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இடமாற்றப்பட்டுள் ளதுடன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ. எல்.ஏ. பிரசன்னவுக்கு எல்பிட்டிய பிராந்தியத்தில் இருந்து நுகேகொட பிரந்தியத்திற்கு இடமாற்றம் வழங் கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். பீ. டீ. தீப்தி குமார நுகேகொடை பிராந்தி யத்தில் இருந்து எல்பிட்டிய பிராத்தி யத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 08 பேர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் இருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட் டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.



# நாட்டில் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுவாச நோய்களில் இருந்து பாது காத்துக் கொள்வதற்கு சுகாதார பாது காப்பு நடைமுறைகளைப் பின்பற்று மாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானம் தொடர்பான விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரன பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல் போன்ற அறி குறிகள் காணப்படுமாயின் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாது காப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானதென அவர் தெரிவித் துள்ளார்.

சுவாச நோய்கள் தொடர்பில் முதி யோர், கர்ப்பிணித் தாய்மார், குழந் தைகள், நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட தரப்பினர் விசேட கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானம் தொடர்பான விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரன தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளிட்ட நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் சுவாசத் தொற்றுக ளுக்கு உள்ளாகும்போது உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ள எந்த வொரு தரப்பினரும் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டுமெனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

# இராணுவத்திலிருந்து விலகியவர்களை பொலிஸில் சேர்த்துக் கொள்ளத் திட்டம்

இராணுவத்திலிருந்து சட்டப்பூர்வ மாகப் பதவி விலகிய 10,000 பேரை பொலிஸில் சேர்த்துக் கொள்ளத் திட்ட மிட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அதன்படி, 45 வயதுக்குட்பட்ட இரா ணுவத்திலிருந்து பதவி விலகிய வர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப் படுகிறது.

மேலும் அவர்களை 05 வருடத்திற்கு பணியமர்த்துவதற்கான பொருத்தமான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவை யின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய பொசன் தினத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம்

தேசிய பொசன் தினத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், மிஹிந்தலை மற்றும் அட்டமஸ்தான பகுதிகளில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குளங்கள் மற்றும் நீர்நிலைகளை அண்மித்து விசேட உயிர் பாதுகாப்பு பிரிவினர் அடங்கிய குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வேலைத்திட்டம் 24 மணித்தியாலங்களும் நடைமுறைப்படுத்தப்படுமென பதில் பொலிஸ் மாஅதிபர் ப்ரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் புனித பூமிக்கு வருகைதரும் பக்தர்களுக்காக 21 வாகனத் தரிப்பிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை புனித பூமியில் 07 வாகனத் தரிப்பிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேற்படி இடங்களில் தமது வாகனங்களை நிறுத்திவைக்க முடியும் என பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# வவுனியாவில் மூன்றாம் பாலினத்தவரின் நடைபவனி

















(கி.வசந்தன

மூன்றாம் பாலினத்தவரின் நடைபவனி நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

தமக்கான சுய மரியாதையுடன் கூடிய அங்கீகாரம் கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்து மூன்றாம் பாலினத்தவர்கள் ஏற்பாடு செய்த நடைபவனி வவுனியா புதிய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகி தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் முன்பாக நிறைவடைந்தது.

தமக்கான அங்கீகாரமும் சமூக மரியாதையும் கிடைக்க வேண்டும் எனத் தெரிவிக்கும் பதாதைகளை அவர்கள் தாங்கி இருந்தனர். வானவில் நிறங்கள் பொருந்திய கொடிகளையும் அவர்கள் கொண்டு சென்றனர்.

இதன்போது மூன்றாம் பாலினத்தவர்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# இன்று அதிகாலை காரைதீவு கண்ணகை அம்மனுக்கு திருக்குளிர்த்தி!

விபுலமாமணி வித்தகர்
வி.ரி.சகாதேவராஜா (காரைதீவு)

“அணியாரங் கற்பிற் அருங்கலமே நல்ல வணிகர் குலத்துதித்த மாதே பணிமணியின் சேய சிலம்பணியும் செல்வியே காரைநகர்தாயே எமைக் காத்தருள் .”

கண்ணகித் தெய்வத்திற்கு சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்து சிலை சமைத்து, சேர தலை நகரம் வஞ்சி மாநகரில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து, பெருவிழா எடுத்தான் என்பது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது.

இப் பெருவிழாவிற்கு சேரமன்னனின் அழைப்பின் பேரில் கடல்சூழ் இலங்கை மன்னன் கஜபாகு சென்றான் என்பது வரலாறு.

கிறிஸ்துவுக்கு பின் 12ஆம் நூற்றாண்டில் இது நடைபெற்றது.

முப்பெரும் விழாவிற்கு சென்ற கஜபாகு மன்னனின் அழைப்பின்பேரில் சேரன் செங்குட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் விதவை மகளான தேவந்தி அம்மையார் தனது மகள் சின்ன நாச்சியாருடன் கதிர் காம யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்து கண்டி மன்னரின் விருந்தினராக தங்கியிருந்த சில நாள்களின் பின்னர் யாத்திரையை மேற்கொண்டார்.

அம்மையார் தான் வரும்பொழுது தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளை கொண்டு வந்தார் எனவும் அவற்றில் இரு சிலைகள் அகோர வடிவுடையனவாகவும் ஒன்று சாந்த சொரூபமான வடிவம் கொண்ட சிலையாகும் என்றும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

அம்மையாரின் யாத்திரை வழியில் ஏறாவூரில் அவர் அவருடைய சிலைகளில் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டார்.

பின்னர் மீதி இரு சிலைகளுடன் காரைதீவு பழம்பெரும் பதியில் வந்து தங்கினார் தேவந்தி அம்மையார். காரைதீவில் விருந்தோம்பலில் கவரப்பட்டு தங்கியிருந்த வேளையிலே அங்குள்ள வேம்பு மரத்தின் கீழ், தான் கொண்டுவந்த இரு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடு இயற்றினார் .

அந்த காலத்தில் கண்டி அரசனின் ராஜ பிரதி நிதியாகிய வன்னிமை அவரது மனைவி சகிதம் அட்டப்பள்ளம் சிங்காரத் தோப்பில் இருந்து யானை மீதேறி நகர்வலம் வந்தார். அவர் அம்மையாரின் பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். அங்கு வன்னிமையின் மனைவியின் கண்ணொளி மங்க பெற்று அம்மையாரின் வேண்டிக்கொண்டதால் மீண்டும் கண்ணொளி பெற்றமை வரலாறு.

இதற்காக வன்னிமை அங்கு புனித ஆலயத்தை ஸ்தாபித்து அதனை நிர்வகிப்பதற்கு நூற்றி ஒரு ஏக்கர் நெல் காணிகளை நேர் கடனாக வழங்கினார். இதனை கண்கண்வெளி என அழைப்பர்.

கிராமத்தில் தேவந்தி அம்மையாரும் அவரது மகளான சின்ன நாச்சியாரும் வாழ்ந்து வருகையில் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த குடிமக்களின் பிள்ளைப் பேறு குறைந்துகொண்டு செல்வதனால் இதற்கு காரணமாக அமைந்த அமைந்த பத்தினி தெய்வத்தின் அகோர வடிவத்தை மக்களின் கோரிக்கையின் படி ஜனசந்தடி அற்ற பட்டிமேடு என்னும் கிராமத்தில் தேவந்தி அம்மையார் பிரதிஷ்டை செய்தார் .

அழகு நிறைந்த சின்னநாச்சியார் மீது மையல் கொண்ட இளைஞர்கள் அம்மையாருக்கும் அவரது மகளுக்கும் தொந்தரவு கொடுத்தனர். அதன் காரணத்தினால் சாந்த சொரூபமான பத்தினி தெய்வ விக்ரகத்துடன் தனது மகளுடனும் தம்பிலுவில் என கிராமத்திற்கு இடம் பெயர்ந்து விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தார்.

இந்நிலையில் காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய், அம்மை நோய் என்பன துயரங் களைக் கொடுத்தன. இதன் காரணமாக மக்கள் தம்பிலு வில் கிராமத்துக்குச் சென்று தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்து பத்தினி தெய்வத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்து அம்மையாரின் வேண்டுகோளின்படி கற்புக்கரசி கண்ணகி குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர்.

இப்பெரு விழாவில் கொம்பு முறித்தல், போர்த் தேங்காய் உடைத்தல், தட்டு வசந்தன் போன்ற நிகழ் வுகள் நிகழ்ந்தன என்பது வரலாறு கூறும் செய்திகள் ஆகும்.

பெருவிழா வைகாசித் திங்களில் வருடா வருடம் ஆரம்பிக்கின்றது. முதல் நாள் பட்டயம் கூறுகின்ற நிகழ்வும் இடம்பெற்று வந்தது. வைகாசிப்பொங்கல் திருக்குளிர்த்தி, குழுத்தி எனும் நாமங்கள் அழைக் கப்பட்டு வந்த இந்த சடங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுவது அம்பாளின் அனுக்கிரகமே.

பொதுவாக ஈழநாட்டிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழா தமிழ் மாத வைகாசி பவுர்ணமியில் இடம்பெறும். ஆயினும் காரைதீவு மற்றும் வற்றாப்பளையில் கோயில் கொண்டிருக்கும் பத்தினி தெய்வத்தின் திருவிழா வைகாசி பௌர்ணமி திங்கட்கிழமை நடைபெறும். ஆயினும் திங்கட்கிழமை அல்லது வைகாசி பவுர்ணமியில் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை நடைபெறுவது மரபாகும்.

கண்ணகி வழக்குரையில், வைகாசித் திங்கள்

தொடர்ச்சி▼









# இன்று அதிகாலை காரைதீவு கண்ணகை அம்மனுக்கு திருக்குளிர்த்தி!

**தொடர்ச்சி▲**

வருவேன் என்று ... என்று கூறுகின்றது. அதை அடி யொற்றி திங்கள் என்பது பௌர்ணமியும் திங்கட் கிழமையும் குறிப்பதாகும்.

காரைதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் தமிழ் மாதம் வைகாசி திங்கட்கிழமை நடைபெற்று வருவது மரபுவழி வந்ததாகும்.

இவ்வாலயத்தின் திருவிழாவானது குளிர்த்தி நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்வரும் திங்கட் கிழமை அன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தவுடன் கல்யாண கால் நடுவது உடன் ஆரம்பமாகின்றது.

இங்கு கல்யாண காலாக பூவரசம் மரமே தெரிவு செய்யப்படுவது மரபாகும்.

சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவுசெய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் உள்ள பூவரச மரத்தில் உள்ள பூவரசு மரத்தின் கிளையை ஆயுதம் பாவிக்காமல் முறித்து அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்திற்கு கொண்டு செல்வார்கள்.

ஆலயத்திலேயே பத்தினி தெய்வத்திற்கு முன்பாக பூவரசு மரக் கிளையை நட்டு கப்புகனார் கிரியைகள் செய்து கூறை சேலை அணிவித்து ஆலயத்தில் உணர்வு பூர்வமாக நடுவார்கள்.

அங்கு பூசைசெய்து முதல் நாள் நிகழ்வு நிறை வடையும்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கல்யாண காலுக்கும் அம்பாளுக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர் உடுக்கை அடித்து ஊர் சுற்று காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தொடங்கி ஞாயிறு வரைக்கும் பகல் ஒரு மணிக்கு அம்பாளுக்கு பூசையும் மாலை 7 மணிக்கு மணிக்கு அம்பாளுக்கு உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பாடுதலுடன் 5 நாள்களில் நிகழ்வு நிறைவு வரும் .

ஐந்து நாள்களிலும் பத்தினி தெய்வத்தின் பகல்பூஜை செய்யும்போது அம்பாளுக்கு சோறும் கறியும் படைக்கப்படும். இதனை பச்சை கட்டுதல் என்று அழைப்பார்கள்.

இவ்வாலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் மரபுரீதியான சிறப்பான பிரசாதம் சோறும் கறியும் ஆகும் .

இறுதி நாளான திங்கட்கிழமை முழுநாளும் பூஜைகள் இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவார்கள். ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும்  காவடி எடுத்தும் நேர்த்திக் கடன்களைச் செலுத்துவார்கள்.

அன்றைய தினம் பக்தர்கள் உபவாசமிருந்து பத்தினி தெய்வத்திடம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுச்க்டிப்பார்கள். திங்கள் முழு நாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக் கதை பாடப்படும்.

இறுதிநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அம்பாளுக்கு சிறப்பான விசேட பூஜை இடம்பெற்று தொடர்ந்து குளித்திபாபாடல் பாடி வழிபடுவர்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனை குளிர்விக்கும் பொருட்டு குரச்சி கலயத்தில் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தாமரைப் பூக்கள், சிலம்பு, அம்மானைக் காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சமான வேம்பு மரத்தின் பெறப்பட்ட இலைகளால் பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப கலயத்தில் எடுத்துச்செல்லப்படும் நீர் தெளிக்கப்படும்.

அவ்வேளையில் எட்டு திசைகளிலும் இருந்து வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் குளிர்த்தி பாடல்கள் பாடி முடித்ததும் கப்புகனாரால் மங்கல கீதம் பாடப்பெற்று சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

குளிர்த்தி முடிவடைந்ததும் பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.

குளிர்த்தி முடிந்து. அடுத்து வரும் திங்கட்கிழமை அம்பாளுக்கு எட்டாம் சடங்கு இடம்பெறும். பிற்பகல் 3 மணியில் இருந்து கிராமத்து மக்கள் அங்கு தனித்தனியாக புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியை கொண்டு பொங்கலிட்டு நேர்த்தி செய்வார்கள்.

இது ஆலயத்தின் விசேஷமான அம்சம் என்பதை குறிப்பிடலாம் யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தாவையும் இந்நாட்டிற்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகி தாயை காரைதீவு தமிழ் கிராம மக்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டு வருகின்றார்கள்.

பாரம்பரிய வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு மக்கள் மனங்களில் நம்பிக்கை மிகுந்த வாழ்க்கையை உருவாக்குவதாக.






# கிழக்கைக் காப்பற்ற கிழக்குத் தமிழ்க் கூட்டமைப்புடன் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்று இணையவேண்டும்

## இப்படி வலியுறுத்துகின்றார் கருணா அம்மான்

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் ஒற்றுமையாகச் செயற்படாமல் விட்டால் எதிர் காலத்தில் ஒரு தமிழ் முதல் அமைச்சரை உருவாக்க முடியாத அபாயகரமான நிலைமை இருக்கின்றது. எனவே கிழக்குத் தமிழர் கூட்டமைப்புடன் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைந்து செயற்பட முன் வர வேண்டும் என முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவருமான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சி.சந்திரகாந்தன், எஸ்.. வியாழேந்திரன், முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளீதரன் ஆகியோர் ஒன்றிணைந்து அமைத்த கிழக்குத் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூரட்சி மன்றத் தேர்தலில் படகு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் சத்திய பிரமாணம் செய்யும் நிகழ்வு மட்டு. வை.எம்.சி.ஏ. மண்டபத்தில்நேற்றுத் திங்கட்கிழமை இடம் பெற்றது. இதில் கலந்துகொண்ட கருணா அம்மான் அங்கு உரையாற்றுகையில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதை சிறந்த நிகழ்வாகப் பார்க்கின்றோம். இது குறுகியகால அரசியல் அல்ல. ஒரு நீண்ட கால வெற்றிப் பயணமாக மாற்றி அமைக்கப்பட வேண்டிய தேவைபாட்டை உருவாக்குபவர்களாக நீங்கள் சத்திய பிரமாணம் எடுத்துள்ளீர்கள்.

இருக்கின்ற சபைகளிலே அநீதிகளை தட்டிக் கேட்பவர்களாக, மக்களுக்கு சேவையாற்றுபவர்களாக, கிழக்குத் தமிழர் கூட்டமைப்புத் தொடர்பான கொள்கைகளை மக்களுக்கு கொடுப்பவர்களாக இருக்கவேண்டும்.

கிழக்கு தமிழர் கூட்டமைப்பை உருவாக்கியதன் நோக்கம் வெறும் பதவி பட்டங்களுக்காக அல்ல. எங்களது கிழக்கு மாகாண மக்கள் உரிமையுடனும் தற்றுணிவுடன் காத்திரமான தியாகத்துடன் வாழவேண்டும் என்பதற்காக.

கிழக்கு மாகாணம் மூவினங்களும் செறிந்து வாழும் இடம். எனவே தமிழ் மக்கள் ஆகிய நாங்கள் ஒற்றுமையாகச் செயற்படாமல் விட்டால் நிச்சயமாக ஒரு தமிழ் முதல் அமைச்சரை உருவாக்க முடியாது. ஆகவே தான் கிழக்கு தமிழர் கூட்டமைப்பை உருவாக்கி அனைத்து கட்சிகளையும் ஒன்றிணையுமாறு கேட்டுள்ளோம்.

இதில் பதவி ஆசை, பட்டம் போன்றவற்றுக்காக செயற்படுவதாக இருந்தால் கிழக்கு மாகாணம் பறி போவது என்பது உறுதியான விடயம். இதனை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே ஆரம்பத்தில் கூறியிருந்தோம், தமிழ் தேசிய கூட்டமைப்பு இணைந்து கொள்ளுங்கள் என. இந்த முறை வெற்றி பெற்ற வேட்பாளர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்தால் 12 சபையில் தமிழர்கள் ஆட்சி அமைக்க முடியும். இதைத்தான் வெளிப்படையாகக் கூறியிருந்தோம்.

இப்போது அரசாங்கமும் அழைப்பு விடுத்துள்ளது. எனவே யார் முன் வருகின்றார்களளோ, அவர்களுடன் எங்களுக்கு சாதகமான பேச்சுவர்த்தை நடாத்தி நாங்கள் அந்த ஆட்சியை அமைப்பதற்கு உதவி செய்வோம். அதில் மாற்று கருத்து இல்லை. இதனை கிழக்கு மாகாண தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

வடமாகாணத்தை எடுத்து கொண்டால் இன்று ஆட்சி அமைப்பதற்காக எதிரும் புதிருமாக இருந்த கஜேந்தரகுமாரை தமிழ் தேசிய கூட்டமைப்பு சந்தித்தது. அவ்வாறே டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சிவஞானம் சந்தித்துள்ளார். அதற்குப் பல விமர்சனம் நடக்கின்றன. அதில் வேடிக்கையான விடயம் ஒட்டுகுழு தலைவரை சந்தித்ததாக.

அவரும் மக்களுக்காக போராட்டத்துக்காக ஆயுதம் தூக்கி வந்த தலைவர்தான். அவர் பல வருடங்களாக நாடாளுமன்றத்தில் இருந்து சேவையாற்றியவர் வந்தவர். ஆகவே ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். சிவஞானம் துணிந்து சென்று டக்கிளஸ்/டன் பேசி ஆட்சி அமைப்பதற்கான முயற்சியை வரவேற்கின்றோம். இது போன்று எதிர்காலத்தில் நாங்கள் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும் என்பதுதான் எங்களது வேண்டுகோள்.

அதைத்தான் கிழக்கு மாகாணத்தில் எதிர்பார்கின்றோம். வேடிக்கை என்னவென்றால் யுத்தம் நடந்து கொண்ட காலத்தில் யுத்தத்தை விமர்சித்தவர்கள் அல்லது யுத்தத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் தற்போது தேசியவாதிகளாக மாற்றமடைந்துள்ளனர். அவர்கள் தான் தேசியத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகின்றனர். உண்மையில் களத்தில் இருந்த போராளிகள் இன்று துரோகிகளா ஆக்கப்பட்டுள்ளனர். எனவே களத்தில் நின்ற எத்தனையோ போராளிகள் கிழக்கு தமிழர் கூட்டமைப்பில் வெற்றி அடைந்துள்ளனர் என்பதை தமிழ் மக்கள் விளங்கி கொள்ள வேண்டும்.

நாங்கள் சாரயமே, ஒரு சோற்று பார்சலே, அரிசி மூடை கொடுக்க வில்லை. அந்த வாக்குகள் மக்களின் அடிமனதில் இருந்து வந்த வாக்குகள். இன்று நாடாளுமன்றத் தேர்த்லில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சாராயம், அரிசி மூடை கொடுத்தது எங்களுக்கு தெரியும் என ஆளும் கட்சி அந்தஸ்த்திக் உள்ள அமைச்சர்கள் குற்றம் சாட்டுகின்றனர். எவ்வளவு அவமானம்?

அவர்கள் தான் தேசியவாதிகள் இன்று தேசியம் பேசுகின்றனர். - என்றார்





# கூட்டணி பேச்சுக்கு பா.ஜ.கவில் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை: பிரேமலதா



கூட்டணி பேச்சுவார்த்தைக்கு பா.ஜ.கவில் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை என்று தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தர்மபுரியில் தே.மு.தி.க. நிர்வாகி இல்லத் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளுக்கும் பொறுப்பாளர்களை நியமித்து, தேர்தல் பணி மேற்கொள்கிறோம்.

இதற்காக விரைவில் மாநில, மாவட்டச் செயலாளர்களுக்கான கூட்டம் நடைபெற உள்ளது. எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி கடலூரில் மாநாடு நடத்த உள்ளோம். தொடர்ந்து எங்கள் பயணம் தொடரும். பா.ஜ.கவில் இருந்து, கூட்டணி பேச்சுவார்த்தைக்கு எங்களுக்கு எந்த அழைப்பும் வரவில்லை.

அதேநேரத்தில், அ.தி.மு.க. கூட்டணியில் இல்லை என்று நாங்கள் எங்கும் சொல்லவில்லை. தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இரங்கல் தீர்மானத்துக்கு நன்றி சொன்னோம். இது அரசியல் நாகரிகம்.

எந்தக் கட்சியாக இருந்தாலும் பிறந்த நாள் வாழ்த்து சொல்வது, அதற்கு நன்றி சொல்வது அரசியல் மாண்பு, அதைத்தான் நாங்கள் செய்தோம். இதனால் கூட்டணி மாறுமா, அதே கூட்டணி தொடருமா என்பது உங்கள் கற்பனை. கூட்டணி தொடர்பான இறுதி முடிவை கட்சியின் தலைமைக் கழகம் ஜனவரி 9 ஆம் திகதி அறிவிக்கும்.” என்றார்.

# த.வெ.க. கொள்கை பரப்புச் செயலாளராக முன்னாள் ஐ.ஆர்.எஸ் அதிகாரி அருண்ராஜ்





த.வெ.கவில் இணைந்துள்ள முன்னாள் ஐ.ஆர்.எஸ். அதிகாரி அருண்ராஜ், கட்சியின் கொள்கை பரப்புப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பல முன்னாள் எம்.எல்.ஏக்கள் த.வெ.கவில் இணைந்துள்ளனர்.

த.வெ.க .தலைவர் விஜய் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்பு மற்றும் செயல்திட்டங்களை மேம்படுத்தும் வகையில் முன்னாள் ஐ.ஆர்.எஸ். அருண்ராஜ் கொள்கை பரப்புப் பொதுச் செயலாளர் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்.

இவர், எனது உத்தரவு மற்றும் ஆலோசனைக்கு இணங்க, கழகப் பொதுச் செயலாளர் என்.ஆனந்தின் வழிகாட்டுதலின்படி கழகக் கொள்கைகள் மற்றும் கொள்கை சார்ந்த செயல் திட்டப் பணிகளை மேற்கொள்வார். கழகத் தோழர்களும் அனைத்து நிலை நிர்வாகிகளும் புதிய பொறுப்பாளருக்கு முழு ஒத்துழைப்பை நல்கி வரும் சட்டமன்றத் தேர்தலுக்கான கட்டமைப்பு மற்றும் தேர்தல் முன்னெடுப்புகளை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ராஜலட்சுமி, தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டேவிட் செல்வின், அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வைத்தியர் ஸ்ரீதரன், ஜேப்பியார் ரெமிபாய் கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் வைத்தியர் மரிய வில்சன், முன்னாள் நீதிபதி சுபாஷ் ஆகியோர் அண்மையில் த.வெ.கவில் இணைந்துள்ளனர். அவர்களுக்கு நிர்வாகிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.” என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமித் ஷாவின் வருகையால் தி.மு.க. அரண்டுபோயுள்ளது

## எல்.முருகன் தெரிவிப்பு



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் தமிழக வருகையால் ஒட்டுமொத்த திமுகவும் அரண்டு போயிருக்கிறது என்று மத்திய இணையமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் தமிழக வருகையால் ஒட்டுமொத்த தி.மு.கவும் அரண்டு போயிருக்கிறது. எத்தனை ‘ஷாக்கள்’ வந்தாலும் தமிழகத்தில் தி.மு.கவை ஒன்றும் செய்ய முடியாது என்று ஜம்பம் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அச்சத்தில் உறைந்து போயிருப்பது தெரிகிறது

மத்திய அமைச்சர் அமித் ஷாவின் பேச்சால் நடுங்கிப் போயிருக்கும் தி.மு.கவினரின் பிதற்றல் பேச்சுக்களையும், அறிக்கைகளையும் பார்த்தாலே அனைவருக்கும் தெரிகிறது. தி.மு.க. ஆட்சிக்கு முடிவு கட்ட நாள் குறிக்கப்பட்டு விட்டது. பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி, அதில் 10 சதவீதத்தை கூட செய்யாமல் வரலாறு காணாத ஊழல் செய்து, மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து குடும்ப ஆட்சி நடத்தி வரும் மு.க. ஸ்டாலின், தனது ஆட்சியின் நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்.” என்று குறிப்பிட்டுள்ளார்.





# நேபாளத்தில் முதன்முறையாக நிறுவப்பட்ட தாய்ப்பால் வங்கி

நேபாளத்தில் முதல் முறையாக, குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்கும் நோக்குடன் ஒரு தாய்ப்பால் வங்கி நிறுவப்பட்டுள்ளது.

குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கும், குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும், முறையாகப் பராமரிக்கப்படாத குழந்தைகளுக்கும் இந்த வங்கியின் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன.

யூனிசெஃப் அமைப்பு, நேபாள அரசாங்கம் என்பன இணைந்து இந்த திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


# காசாவுக்கு உதவச் சென்ற படகு இஸ்ரேலினால் தடுத்து நிறுத்தம்

இஸ்ரேலிய கடற்படையின் முற்றுகையை மீறி காசாவிற்குள் மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்ல முயற்சித்த படகொன்றை, இஸ்ரேலிய படைகள் தடுத்து நிறுத்தியுள்ளன.

முன்னதாக, இஸ்ரேலின் கடற்படை, மேற்படி படகை மாற்று வழியை பயன்படுத்துமாறு கோரிய போதும், அந்த படகு காசாவிற்குள் நுழைய முயற்சித்துள்ளது.

இதனையடுத்தே அந்தப் படகு தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாலஸ்தீன மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள், காசாவிற்கு உதவிகளை எடுத்துச் செல்ல ஒன்றாகப் பயணிக்கும் வகையில் அதிக கப்பல்கள் தேவை எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# வர்த்தக போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்கா - சீனா இடையே லண்டனில் பேச்சு

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையில் நேற்று புதிய சுற்றுப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் வர்த்தக போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், லண்டனில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்க சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவினர் சீன பிரதிநிதிகளை சந்திப்பார்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

கடந்த வாரம் சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் இற்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலை அடுத்தே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக போர் இடம்பெற்றதை அடுத்து முதற் தடவையாக இந்த தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.06.2025




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது .




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மனநிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.முதுகு மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.06.2025




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும்




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.





# வெருகல் பிரதேச சபை தவிசாளர் நேற்றைய நிகழ்வில் பொறுப்பேற்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**

வெருகல் பிரதேச சபை தவிசாளர், உதவி தவிசாளர்,உறுப்பினர்களின் வரவேற்பு மற்றும் பதவியேற்பு நிகழ்வு நேற்று பிரதேச சபை செயலாளர் வி.சுஜாதா தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், பிரதிஷ்ட பிரதம குருவான அச்சுவேலி சிவாகம கலாநிதி சிவஸஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் ஆகியோரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

வெருகல் பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அறுதிப் பெரும்பாண்மையுடன் ஆட்சிய மைத்துள்ள நிலையில் வெருகல் பிரதேச சபையின் தவிசாளராக சேனுராமன் கருணாநிதி நேற்றைய தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



